Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 4.00

சுடர்: 5 பிரமோதூத ஸ்ரீ கார்த்திகை மீ 09 உ ஞாயிற்றுக்கிழமை (25 11 1990) UTHAYAN—A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர் 262

# மாங்குளம் இராணுவ முகாம் புலிகளால் முற்றாக அழிப்பு

## முகாம் வாசலில் புலிக்கொடி

— மாங்குளத்திலிருந்து எமது செய்தியாளர் —

மாங்குளம், நவ. 25

மாங்குளம் இராணுவ முகாம் கைப்பற்றப்பட்டதை அடுத்து அங்கு புலிக்கொடிகள் பறக்கவிடப்பட்டன.

முகாம் வாசலிலும் நேற்று புலிக்கொடி பட்டொளி வீசிப்பறந்து கொண்டிருந்தது.

[ஓ 94]

## சிப்பாய்களின் சடலங்களை அகற்றும் பணியில் புலிகள்

மாங்குளம், நவ. 25

மாங்குளத்தில் கொல்லப்பட்ட இராணுவத்தினரின் சடலங்களைத் தேடி அகற்றும் வேலைகளில் நேற்று விடுதலைப் புலிகள் ஈடுபட்டிருந்தனர்.

பெரும் எண்ணிக்கையான இராணுவத்தினரின் சடலங்கள் கட்டட இடிபாடுகளுக்குள்ளும், பதுங்கு குழிகளுக்குள்ளும் சிக்குண்டு கிடக்கின்றன.

சடலங்களை அகற்றி அப்பகுதியைச் சுத்தமாக்கும் பணியில் விடுதலைப் புலிகள் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர்.

[ஓ 94]

## காட்டில் தேடுதல் வேட்டை

மாங்குளம், நவ. 25

மாங்குளம் இராணுவ முகாம் தகர்க்கப்பட்டபோது இராணுவத்தினரில் சிலர் காடுகளுக்குள் தப்பி ஓடியிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது.

காடுகளில் விடுதலைப் புலிகள் தேடுதலை நடத்தி வருவதாக மாங்குளம் பகுதியில் இருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

காட்டுக்குள் தப்பி ஓடியவர்களைத் தேடி அழிக்கும் தாக்குதல் நடவடிக்கைகள் இப்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## முகாம் வீழ்ந்த பின்னரும் சகடை, பொம்மர் தாக்கு

மாங்குளம், நவ. 25

மாங்குளம் இராணுவ முகாம் விடுதலைப் புலிகள் வசம் வீழ்ந்தபின்னரும் அப்பகுதியில் தொடர்ந்து பொம்மர், சீனச்சகடை மற்றும் ஹெலிக்கொப்டர் தாக்குதல்கள் இடம்பெற்று வருகின்றன என்று எமது மாங்குளம் செய்தியாளர் அங்கிருந்து அறிவிக்கிறார்.

கடந்த வியாழன் இரவு மோதல் ஆரம்பமானபின்னர் நான்கு பொம்மர்கள், இரண்டு அவ்ரோக்கள், சீனச் சகடை விமானம் ஒன்று, இரண்டு ஹெலிக்கொப்டர்கள் ஆகியவை மாறிமாறி வந்து தாக்குதல்களை நடத்தின.

வான்படைத் தாக்குதல்களினால் அப்பகுதியில் உள்ள அரச திணைக்களக் கட்டடங்கள், வர்த்தக நிலையங்கள் பல நிர்மூலமாகியுள்ளன.

(உ-94)

## குடியிருப்பு பகுதிகள் மீதும் நேற்று விமானக் குண்டுவீச்சு

மாங்குளம் முகாம் விடுதலைப் புலிகள் வசம் வீழ்ந்ததை அடுத்து ஆக்ரோஷமடைந்த ஸ்ரீ லங்கா விமானப் படையினர் நேற்று பனிக்கன்குளம், ஒலுமடு, கரிப்பட்ட முறிப்பு, மன்னகுளம், கனகராயன்குளம் உட்பட பல பொதுமக்கள் குடியிருப்புப் பகுதிகள் மீது கண்மூடித்தனமான குண்டுவீச்சுத் தாக்குதல்களை நடத்தி இருப்பதாக மாங்குளத்திலிருந்து எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இந்தத் தாக்குதல்களினால் பொதுமக்கள் பலர் உயிரிழந்திருப்பதாக முதலில் கிடைத்த செய்திகள் தெரிவித்ததாகவும் அவர் அறிவித்துள்ளார்.

(உ-94)

## வடபகுதி மக்கள் நேற்று வெடி கொளுத்தி ஆரவாரம்

மாங்குளம் இராணுவமுகாம் தாக்கி அழிக்கப்பட்டதைக் கேள்வியுற்ற குடாநாட்டு மக்கள் வெடி கொளுத்தி மகிழ்ந்தனர்.

முகாம் அழிக்கப்பட்ட செய்தி நேற்று தமிழ்ப் பகுதிகளில் வாகனங்களில் ஒலிபெருக்கி மூலம் மக்களுக்கு அறிவிக்கப்பட்டது.

கிளிநொச்சி மற்றும் வன்னிப் பகுதி மக்களும் இந்தச் செய்தியைக் கேட்டு வெடி கொளுத்தி ஆரவாரம் செய்ததாக அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

(ஓ-5)

## நூற்றுக்கணக்கில் படையினர் பலி! இராணுவத் தளபாடங்களும் மீட்பு!!

யாழ்ப்பாணம், நவம்பர் 25

மாங்குளம் இராணுவ முகாம் விடுதலைப் புலிகளினால் முற்றாக அழிக்கப்பட்டது. முகாமிலிருந்த படையினர் பல நூற்றுக் கணக்கில் உயிரிழந்தனர்.

பெருமளவிலான பாரிய ஆயுதங்கள் வெடிமருந்துகள் உட்பட பல இராணுவத் தளபாடங்கள் விடுதலைப் புலிகளினால் மீட்கப்பட்டன.

வன்னிப் பிராந்தியத்தின் மத்தியில் அமைந்திருந்த பெரிய இராணுவ முகாமான மாங்குளம் இராணுவ முகாம் மீது கடந்த வியாழன் இரவு 7 மணி முதல் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகளினால் பெரும் தாக்குதல் தொடுக்கப்பட்டது.

தொடர்ந்து 33 மணிநேரம் இடம்பெற்ற தாக்குதல்களை அடுத்து நேற்று அதிகாலை 3 மணியளவில் முகாம் முழுமையாக தகர்க்கப்பட்டு, விடுதலைப் புலிகளின் பூரண கட்டுப்பாட்டிற்குள் கொண்டு

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கரும்புலி போர்க், 14 பெண் புலிகள் உட்பட 51 வேங்கைகள் வீரமரணம்

யாழ்ப்பாணம், நவ. 25

பெரிய நிலப்பரப்பையும், பெரும் எண்ணிக்கையான இராணுவத்தினரையும் கொண்டிருந்த— கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த — மாங்குளம் இராணுவ முகாமை அழித்தொழிக்கும் உன்னத போரில் கரும்புலி லெப்டினன்ட் கேர்ணல் போர்க் மற்றும் பதினான்கு பெண் போராளிகள் உட்பட 51 விடுதலைப் புலிகள் தங்கள் உயிரை அர்ப்பணித்திருக்கின்றனர்.

வீரமரணமடைந்த வேங்கைகளில் கிரிஜா, ரஜனி, கோமகன், மெடிஸ்டலா, பெனாகிர், டோரா, டயனா, ரபிதா, சுதா, இலச்சனா, விக்டோரியா, தமிழ்ச்செல்வி, கோணேஸ், சுபோ ஆகிய பெண் போராளிகளும், கப்டன் கரனும் உள்ளடங்குவர்.

## மட்டுநகரில் 2 தமிழர்கள் படுகொலை

யாழ்ப்பாணம், நவ. 25

நேற்றுக் காலை மட்டக்களப்பு நகரத்தில் 15 தமிழ்ப் பொதுமக்களை கைது செய்த படையினர் அவர்களில் ஆண் ஒருவரையும், பெண் ஒருவரையும் சுட்டுக் கொன்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஏனையோரில் இருவர் தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்றும், மற்றையவர்கள் விடுவிக்கப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(உ)

## கிழக்குத் தாக்குதல்கள்

### 9 ஊர்காவலர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், நவ. 25

மட்டக்களப்பு மாவட்டம் தந்திரிமலையில் அமைந்திருந்த சிங்கள ஊர்காவல் படையின் முகாம் ஒன்றின் மீது விடுதலைப் புலிகள் நேற்று அதிகாலை நடத்திய திடீர் தாக்குதல் ஒன்றில் ஒன்பது ஊர்காவலர் பலியாகினர்.

அவர்களிடமிருந்து 303 ரக துப்பாக்கிகள் - 3, ரவைகள் -

(4ஆம் பக்கம் பார்க்க)

### கிரனேட் வீச்சு

யாழ்ப்பாணம், நவ 25

நேற்று முன்தினம் இரவு மட்டக்களப்பு பஸ் டிப்போவுக்கு முன்னால் 'எல்வ்' வாகனம் ஒன்றில் வந்த இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் கிரனேட் வீச்சுத் தாக்குதலை நடத்தினர்.

[உ]

### கிரானில் 2 படையினர் பலி

கொழும்பு, நவ. 25

மட்டக்களப்பு மாவட்டத்தில் கிரான் பகுதியில் விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் இரண்டு படையினர் மரணமடைந்தனர் என்று கொழும்பில் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

[ஓ-எ]

### ராணுவ முகாம் மீது தாக்குதல்

யாழ்ப்பாணம் நவ. 25

நேற்று முன்தினம் இரவு மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள ஆயித்தியமலை இராணுவ முகாம் மீது விடுதலைப் புலிகள் கிரனேட் வீச்சுத் தாக்குதல் ஒன்றை நடத்தினர்.

ஏற்பட்ட சேத விவரங்கள் குறித்து தகவல் ஏதும் கிடைக்கவில்லை.

[உ]

## மாவீரர் நிகழ்ச்சிகளில் மக்கள் புதிய உத்வேகத்துடன் ஈடுபாடு

யாழ்ப்பாணம், நவ. 25

மாவீரர் வாரத்தின் நான்காம் நாள் நிகழ்வுகள் குடாநாடு முழுவதும் நேற்றுபுதிய உற்சாகத்துடன் இடம்பெற்றன.

மாங்குளம் இராணுவ முகாம் அழிக்கப்பட்ட செய்தி பரவியதை அடுத்து மாவீரர் தினக் கொண்டாட்டங்கள் களைகட்டின.

மாவீரர் தின நிகழ்வுகளினால் தமிழீழ மக்கள் மத்தியில் உருவாகியுள்ள எழுச்சி நேற்று புதிய உத்வேகத்தைப் பெற்றதையும் அவதானிக்க முடிந்தது.

குடாநாட்டின் பல பகுதிகளிலும், நேற்று இடம்பெற்ற கலை நிகழ்ச்சிகள், கவியரங்குகள், நாடகங்கள் போன்றவற்றில் மாவீரர் வாரத்தில்– மாங்குளத்தில்– உயிர்த்தியாகம் செய்த போராளிகளின் வீரஉணர்வு பெரிதும் போற்றிப் புகழப்பட்டது.

மாவீரர் வாரத்தை ஒட்டி இரத்ததான நிகழ்ச்சிகளை நடத்தவும் பல பொது அமைப்புகள் ஏற்பாடு செய்து வருவதாகத் தெரியவருகிறது.

(உ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

நத்தார், புதுவருட வாழ்த்துக்களை பொருத்தமானவும், மலிவானவும் பெற்றுக் கொள்ளலாம். (விட்பாரிகளுக்கு விசேட கழிவுண்டு) ... இல. ... பருத்தித்துறை வீதி, ... [14880]

### "சாயி ரைப்பிங் சென்ரர்"

தமிழ், ஆங்கிலம் ரைப்பிங் வகுப்புக்கள் 1 - 12 - 90 இல் ஆரம்பம். மற்றும் தமிழ், ஆங்கிலம் ரைப்பிங் வேலைகளும் செய்து கொடுக்கப்படும். தொடர்பு:- சாயி ரைப்பிங் சென்ரர், நுணாவில் சந்தி, சாவகச்சேரி. [14839]

### தேவை

புடவை வியாபாரத்தில் நல்ல அனுபவமுள்ள பெண் விற்பனையாளர் தேவை. தொடர்பு; ஏசியன் ரெக்ஸ் ரெக்ஸ்டைல் வீதி திருநெல்வேலிச் சந்தி. (14841)

### சேவை

காலை 7 மணி முதல் 5 மணி வரை போட்டோ ஸ்ரட் (A 4 ஒரு பக்கம் ரூபா 5/- மட்டுமே) றோனியோ வேலைகள் அனைத்தும் உடனுக்குடன் செய்து கொள்ள சண்முகம் றேட்ஸ். 65, பிரதான வீதி, யாழ்ப்பாணம். [14738]

### ஆங்கிலக் கல்வி

பிரத்தியேக ஆங்கில வகுப்புக்கள் Individual Classes மற்றும் G. C. E. (O/L Dec 90 பரீட்சைக்கான பயிற்சி வகுப்புக்கள் நடைபெறுகொண்டிருக்கின்றன. செபஸ்ரன் C/o. நா. உதயராசா, புதிய செம்மணி வீதி, நல்லூர், வடக்கு. (14836)

### தவறிவிட்டது

சங்குவேலி வடக்கு மானிப்பாயை சேர்ந்த செல்லையா பனோசரணின் அடையாள அட்டை 672351375 V யாழ்ப்பாணத்திற்கும மானிப்பாய்க்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து உரிய விலாசத்திற்கு, அல்லது உதயன் பணிமனையில் ஒப்படைக்கவும். (14840)

## 8 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**வேலுப்பிள்ளை தர்மலிங்கம்**

(கட்டட ஒப்பந்தக்காரர்)

என்றும் உங்கள் நினைவாகவும், உங்கள் பணியே எம் பணி என வாழும்!

மனைவி,
பிள்ளைகள்.

அரியாலை.
[14832]

### FUDO

Typewriters - தட்டச்சு இயந்திரங்கள் ... விற்கவும் - விற்கவும், சிறந்த முறையில் திருத்தவும் FUDO, 89/17, மின்சார நிலைய வீதி, 3 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம் (பிரதான வீதி, ... சந்தி) (C/5836)

### ஆஸியில் பாரதி விழா

மெல்போர்ன், நவ 25

ஆஸ்திரேலிய தமிழ் ஒன்றியம் வரும் டிசம்பர் 15 ஆம் திகதி பாரதிவிழாவை நடாத்தவிருக்கிறது.

மெல்போர்ன் பல்கலைக் கழக உயர் தரக் கல்லூரிப் பூங்காவில் இவ்விழா நடைபெறவுள்ளது. (ஐ-ா)

உள்ளூர் வளம் செழித்திட
உள்ளூர் உற்பத்திகளை ஆதரிப்போம்.

**ஆய்வு நிறுவனம் உவந்தளிக்கும் கண்காட்சிகளில்**
**மில்க்வைற் காட்சிச்சாலைக்கு**
தவறாது வருகை தருக பயன் பெறுக.

யாழ் இந்துக் கல்லூரி காட்சிச் சாலையில் விற்பனை நடைபெறும்.

ரூபா 25/- க்கு சலவைப் பவுடர் வாங்கி பொலித்தீன் பை, அகத்திக்கன்று, கீரை விதை சரிசலாங்கண்ணி அன்பளிப்பு பெறுங்கள்

★ **மில்க்வைற்** ★
யாழ்ப்பாணம்.
(சி-5455)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

**வன்னிசிங்கம் சிங்கமாப்பாணர்**
(Retired Audit Examiner)



தோற்றம்:
05 - 05 - 1934

மறைவு:
27 - 10 - 1990

மாதம் ஒன்று கழிந்தாலும் ஆறாத் துயர் தந்து மீளாத் துயில் கொண்ட எங்கள் அன்புத் தெய்வகத்தின் நினைவு என்றென்றும் எமமிடயங்களில் நிலைத்து அஞ்சலி கண்ணீர் பூக்களாக உதிர்கின்றன.

அன்னாரின் ஆத்மா சாந்திக்காகப் பிரார்த்திக்கிறோம்.

மனைவி, பிள்ளைகள்,
உற்றார், உறவினர்கள்.

நீதிராசா றோட்,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

[14830]

விண்ணக வாழ்வின்

## ஓராண்டு நிறைவின் நினைவு



மண்ணில் மலர்வு:
11 - 01 - 1939

உதிர்வு:
26 - 11 - 1989

**S. அன்ரனி சேம்பர் லேன்**

வஞ்சகர்கள் துப்பாக்கி கொண்டு - உம் உடலைத் துளைக்கும்போது எண்ணவில்லை அவர்கள், வாசம் வீசும் மலர் தோட்டத்திலே இருந்து மல்லிகையைப் பிடுங்கி எறிகிறோம் என்று பாசம் தவழும் குடும்பத்தின் அன்பான தலைவனை அழிக்கிறோம் என்று.

ஆண்டொன்று சென்றதம்மா
எம் தந்தை எமைப் பிரிந்து

அன்னாரின் ஆன்ம சாந்திக்காக 26-11-1990 திங்கள் காலை 6.20 மணிக்குப் புனித தோமையார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

மனைவி, மக்கள், மருமக்கள், ...

(14822)

தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்

## மாவீரர் விழா

இடம்: கைலாசபதி கலையரங்கு
பல்கலைக்கழகம் - யாழ்ப்பாணம்
காலம்: 26-11-90 (திங்கள்) பி. பகல் 2 மணி

தனியார் கல்வி நிறுவன இயக்குனர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் பெற்றோர்கள் அனைவரையும் தவறாது சமூகமளிக்கும்படி வேண்டுகின்றோம்.

செயலர்,
தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்,
யாழ் மாவட்டம்.
(சி/5451)

## 2ஆம் வருட நினைவஞ்சலி

ஆண்டவன் அளிப்பு:
28
|
12
|
1970



ஆண்டவன் அழைப்பு:
26
|
11
|
1988

செல்வன்

**யூட் சக்கரியாஸ் சந்திரகுமார்**

ஜெருசலேம் வீதி வழி கல்வாரி நோக்கியன்று சென்றதன் மைந்தனையே அமைதியுடன் பின் தொடர்ந்த வியாகுலத் தாய்போன்று சிலுவைதனில் நின்றிறங்கி அன்னையவள் மடிதனிலே பெறும்பேறு பெற்றனையே.

திரு இசை இசைக்கச் சென்ற வேளை அன்னை மரி பேராலயத்தில் சித்திரவதைக்குள்ளாகி இறந்த சக்கரியாசின் ஆன்ம இளைப்பாற்றிக்காக 26-11-90 காலை 6.15 மணிக்கு மேற்படி ஆலயத்தில் இரங்கற் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்

பெற்றோர், சகோதரர்,
உறவினர், நண்பர்.

பீச் றோட்,
ஈச்சமோட்டை,
யாழ்ப்பாணம்.

[14660]

## மரண அறிவித்தல்

திருமதி

**சிற்றம்பலம் வள்ளியம்மை**

சுருவிலூர்

சுருவிலூர் சிற்றம்பலம் வள்ளியம்மை அவர்கள் சிவபதமடைந்து விட்டார்.

இவர் காலஞ்சென்ற இ. சிற்றம்பலம் அவர்களின் அன்பு மனைவியும், திருமதி இராசலெட்சுமி, Dr இராசலிங்கம் (அமெரிக்கா), சிவலிங்கம், திருமதி மகாலெட்சுமி (லண்டன்) ஆனந்தலெட்சுமி திருமதி சந்திரமதி (ஆசிரியை யாழ் இந்து மகளிர் கல்லூரி) சிறீஸ்கந்தராஜா, அருளேந்திரராஜன், நகேந்திராஜா ஆகியோரின் அன்புத் தாயாரும், த. சண்முகலிங்கம் (நொர்தேண் இன்டஸ்றீஸ் - யாழ்ப்பாணம்) Dr மைத்திரிதேவி (அமெரிக்கா), திருமதி மரகதவல்லி, Dr சிறீகாந்தன் (லண்டன்), இ. மா. பாலசுப்பிரமணியம் (விவசாய ஆராய்ச்சி நிலையம் - கிளிநொச்சி) திருமதி இந்திராணி, திருமதி சோமாவதி ஆகியோரின் அருமை மாமியாரும், சுபோதினி, (இந்தியா), சுரேந்திரன் (லண்டன்) வினோதினி, நந்தினி, அனுஷ (அமெரிக்கா), சிவானி (அமெரிக்கா), சிவசங்கர், பவதாரணி, பிரதீபன், பாலசுஸ்தாரி, இளங்கீரன், அபிராமி, சஞ்சீவன், சரண்யா, மைத்திரி, திவ்யன் ஆகியோரின் அன்புப்பாட்டியும் ஆவார்.

அன்னாரின் ஈமைக்கிரியைகள் 25 - 11 - 90 ஞாயிற்றுக்கிழமை பகல் 11.00 மணியளவில் அன்னாரின் சுருவில் இல்லத்தில் நடைபெற்று, சுருவில் மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

சுருவில், ஊர்காவற்றுறை.
[14844]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

25/11/1990

# உதயன்

## துவறைப் புரிதல்

அரசாங்கத்தின் வரவு-செலவுத் திட்ட அறிக்கை சம்பந்தமான விவாதம் கடந்த செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றத்தில் ஆரம்பமாகி நடந்து வருகிறது. ஆரம்ப தினத்தன்று எதிர்க்கட்சி உறுப்பினரான மகிந்த ராஜபக்ச சபையில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தினார். மனித எலும்புத் துண்டுகளையும், துப்பாக்கி ரவைகளையும் சபைக்குக் கொண்டு வந்து வரவு-செலவுத் திட்டத்தின் சின்னங்கள் அவையே என்று சபை அங்கத்தவர்களுக்குக் காட்டினார்.

அவரது செயலை வெறும் பரபரப்புக்குரிய அல்லது கிண்டலுக்குரிய ஒன்றாக எடுத்துவிடலாகாது. அது பொருள் பொதிந்தது; நிறைந்த அர்த்தமுடையது; தென்னிலங்கையில் நடக்கும் அரச பயங்கரவாதத்தின் பயங்கரத்தன்மையைப் பிரதிபலிப்பது - எடுத்தியம்புவது. அரசாங்கத்திற்கு எதிரான கருத்துடையவர்களை அழிப்பதற்கே 'பட்ஜெட்' பணம் செலவு செய்யப்படுகிறது என்பதை திரு ராஜபக்ச அர்த்தபுஷ்டி விரவ விளங்க வைத்திருக்கிறார்!

அந்த அர்த்தத்தில் இருந்து ஓர் உண்மையும் புலப்படுத்தப்படுகிறது. நாட்டு வருமானத்தில், வெளிநாடுகள் வழங்கும் கடன்களில் இருந்து பாதுகாப்புச் செலவுக்கென அதிக நிதி ஒதுக்கப்பட்டு, அந்த நிதியைக் கொண்டு தமிழர்கள் மட்டுமல்ல, சிங்களவர்களும் கொல்லப்படுகிறார்கள் என்பதே அந்த உண்மை.

புலிகளை ஒடுக்கும் நடவடிக்கை என்று கூறிக்கொண்டு, தமிழ்ப்பிரதேசங்களில் தமிழர்கள் இன ஒழிப்புச் செய்யப்படுகிறார்கள். கிளர்ச்சியாளர்கள் அடக்கப்படுகிறார்கள் என்று கூறிக்கொண்டு தெற்கில் அரசுக்கு எதிரானவர்கள் முடித்துக்கட்டப்படுகிறார்கள்.

தமிழ் மக்களின் இலட்சியப் போரையும், சிங்களவரின் அரசுமாற்றக்கிளர்ச்சியையும் ஒரே தட்டில் வைத்து நிறுக்கக் கூடாது: நிறுக்க முடியாது.

இலட்சியப் போராட்டத்தை(கிளர்ச்சியைக்கூட) கொலைகளால் தடுத்து நிறுத்த முடியாது. அடிப்படைப் பிரச்சினைகளைக் கண்டறிந்து தீர்த்து வைத்தால் மட்டுமே போராட்டத்தை முடிவுக்குக் கொண்டுவர முடியும். இந்தச் சிறிய விடயம் அரச கட்டிலில் இருப்பவர்களுக்குப் புரியவில்லை; புரிந்தும் புரியாதவர்கள் போலச் செயற்படுகிறார்கள்.

கடந்த வருடமே அழிக்கப்பட்டுவிட்டதாகப் பிரசாரம் செய்யப்பட்ட ஜே. வி. பி. மீண்டும் தெற்கில் தலையெடுக்கிறது; அரசுக்கு மீண்டும் தலையிடி கொடுக்கத் தொடங்கியுள்ளது.

பயங்கரவாதத்தால், இராணுவ பலத்தினால், மக்கள் போராட்டங்களை அடக்கிவிடலாம் என்றதனது தவறை அரசு இன்னும் உணர்ந்ததாகத் தெரியவில்லை. தமிழர் விடயத்தில் மட்டுமன்றி, சிங்களவர் எதிர்ப்பையும் தவறான வழியில் அரசு அடக்கப்பார்க்கிறது. அது அரசுக்கும், நாட்டுக்கும், மக்களுக்கும் கெடுதல் விளைவிக்கும் என்பதை எப்போது உணரப்போகிறது?

# அராலித்துறையில் இரவில் ஹெலி சூடு: இருவர் காயம்

## வலி. மேற்கில் பரவலான தாக்கு

யாழ்ப்பாணம், நவ 25

நேற்று முன்தினம் இரவு 9 30 மணியளவில் அராலித்துறைப் பகுதியில் நின்ற பொதுமக்கள் மீது ஹெலிக்கொப்டர் ஒன்று சரமாரியாக வேட்டுக்களைத் தீர்த்தது.

அராலியைச் சேர்ந்த வீரசிங்கம் பாக்கியம் (வயது 39) அவரது மகன் வீரசிங்கம் சுரேஷ் (வயது 9) ஆகிய இருவர் உட்பட பலர் காயமுற்றனர்.

வலிகாமம் மேற்கைச் சேர்ந்த வட்டுக்கோட்டை மூளாய், பொன்னாலை, சுழிபுரம், பண்டத்தரிப்பு ஆகிய பகுதிகளிலும் பரவலாக இரவில் ஹெலிகொப்டரிலிருந்து வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன.

இதனால் இப்பகுதியில் பல வீடுகள் சேதமுற்றன.

அராலித்துறையில் நேற்றுக் காலையிலும் ஹெலித்தாக்குதல்கள் இடம்பெற்றன.

இதேவேளை—

நேற்றுக்காலை 8 00 மணியளவில் வந்த ஹெலி மாவடிப் பகுதியில் வாகனம் ஒன்றை நோக்கி 'கலிபர்' தாக்குதலை மேற்கொண்டது. இதனால் வாகனத்தில் பயணம் செய்த ஒருவர் காயமுற்றார்.

நேற்று 5 மணிநேரம் ஊரடங்கு தளர்த்தப்படும் என்று அரசு அறிவித்திருந்ததால் பெருமளவு மக்கள் மாவடிச் சந்தியில் கூடியிருந்தனர்.

ஹெலித் தாக்குதலை அடுத்து அவர்கள் நாலாபுறமும் சிதறி ஓடிப் பாதுகாப்பைத் தேடினர். (ஒ 15-6-5)

# நாடாளுமன்றம் வந்த எலும்புகள், ரவைகள்!

கொழும்பு, நவ. 25

துப்பாக்கி ரவைகளையும், மனித எலும்புத் துண்டுகளையும் கடந்த செவ்வாயன்று எதிர்க்கட்சி எம். பி. ஒருவர் நாடாளுமன்றத்திற்குக் கொண்டு வந்திருந்தார்.

சுதந்திரக் கட்சியின் அம்பாந்தோட்டை மாவட்ட எம். பியான மகிந்த ராஜபக்ஷவே இவற்றைச் சபைக்கு எடுத்து வந்திருந்தார்.

வரவு - செலவுத் திட்டத்தின் சின்னங்கள் இவை என்று அவர் கூறினார்.

சபைக்குக் கொண்டு வரப்பட்ட எலும்புத் துண்டுகள் 14 வயதுச் சிறுவன் ஒருவனுடையது என்றும் திரு. ராஜபக்ஷ தெரிவித்தார்.

இந்தச் சமயத்தில் சபையில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

### ஜனாதிபதி மகள் நிச்சயதார்த்தம்

வரவு - செலவுத்திட்டம் மீதான விவாதத்தின்போது ஒரு கட்டத்தில் "ஜனாதிபதியின் புதல்வியின் திருமண நிச்சயதார்த்த வைபவம் ஆடம்பரமற்ற முறையில் எளிமையாக நடந்ததாக அறிந்தோம்" என்று மற்றொரு எதிர்க்கட்சி எம். பியான தர்மசிறி சேனநாயக்கா ஒரு செய்தியை வெளியிட்டார். (ஒ)

# மட்டுநகரிலும் ஷெல் வீச்சு; வீடுகள் பல சேதமாகின

கொழும்பு, நவ. 25

மட்டக்களப்பு நகரப்பகுதியில் ஞாயிறு இரவு 9 மணி தொடக்கம் மறு நாள் அதிகாலை வரை ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன; சரமாரியான துப்பாக்கி வேட்டுக்களும் தீர்க்கப்பட்டன.

ஷெல் தாக்குதலினால் லேக் வீதியில் சில வீடுகள் சேதமடைந்தன. கால்நடைகள் சிலவும் மாண்டன. (ஒ)

# தென்மராட்சியில் ஹெலிகள் வாகனங்கள் மீது தாக்குதல்

## தனங்கிளப்பில் லொறி எரிந்தது

தென்மராட்சி நவ. 25

தென்மராட்சியில் நேற்றும் நேற்று முன்தினமும் வாகனங்கள் மீதும் குடியிருப்புப் பகுதிகள் மீதும் ஹெலிகள் கண்டபடி தாக்குதல்களை நடத்தின.

நேற்று, சாவகச்சேரி - தனங்கிளப்பு வீதியில் உணவுப் பொருள்களை ஏற்றி வந்த லொறி ஒன்றின் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. அதனால் லொறியும், பொருள்களும் பெருமளவில் எரிந்து நாசமாகின.

நேற்று முன்தினம் சாவகச்சேரி - கச்சாய் வீதியில் 'கராஜ்' ஒன்றில் நின்ற டிராக்டர்கள் மற்றும் வாகனங்கள் மீது கலிபர் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

டிராக்டர்களும் வாகனங்களும் பெருமளவு சேதமுற்றன. ஒருவர் காயமடைந்தார்.

அதே தினம் மூகமாலை, இளாலி, விடத்தற்பளை, எழுதுமட்டுவாள், மிருசுவில், உசன், காரைக்காடு பகுதிகளில் வாகனங்கள் மற்றும் குடியிருப்பு பகுதிகள் மீது ஹெலிகள் கண்மூடித்தனமாக தாக்குதல்களை நடத்தின.

டிராக்டர் ஒன்று வேட்டுகளினால் துளைக்கப்பட்டு, சின்னாபின்னமாகிக் கிடந்தது.

வேம்பொடுகேணியிலும் மினிவான் மீது கலிபர் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. பயணி ஒருவர் காயமடைந்தார். (ஒ-117-15)

### ஆனையிறவில் தினசரி ஷெல்

தென்மராட்சி, நவ 25

ஆனையிறவு முகாமில் இருந்து தினசரி மாலை வேளைகளில் நாலாபுறமும் ஷெல் தாக்குதல்கள் நடத்தப்படுகின்றன. (ஒ-117)

# மாவீரர் தினச் செய்திகள்

### நெடுந்தீவில்

நெடுந்தீவு, நவ. 25

நெடுந்தீவில் உள்ள அரசாங்க அலுவலகங்கள், பாடசாலைகள் உட்பட பொதுத் தாபனங்களில் தமிழீழ தேசியக்கொடி ஏற்றப்பட்டு மறைந்த மாவீரர்களுக்கு மரியாதை செலுத்தப்பட்டது.

மாவீரர் வாரத்தை முன்னிட்டு பொதுஸ்தாபனங்கள் தமது கந்தோர்களில் சிரமதான நடவடிக்கைகளில் ஈடுபட்டன. இறுதி நாளன்று மாவீரர்களின் நினைவாக விசேட பொதுக்கூட்டம் அருந்ததுயில் என்பவையும் இடம்பெறும். (இ-111)

### சிரமதானம்

நல்லூர் அறிவொளி கல்விக்கழக ஆசிரியர்கள், மாணவர்கள் மாணவிகள் மாவீரர் வாரத்தையொட்டி நல்லூர் பின் வீதியை சிரமதானம் மூலம் அப்புரவு செய்தனர். (இ)

### தனியார் கல்வி நிறுவனம்

தனியார் கல்வி நிறுவன ஒன்றியத்தின் மாவீரர் விழா நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2 00 மணிக்கு யாழ் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறும்.

அனைவரையும் தவறாது கலந்து சிறப்பிக்குமாறு தனியார் கல்வி நிறுவன ஒன்றியம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (இ-6)

### வீடுகளில் விளக்கேற்ற கோரிக்கை

மாவீரர் கூட்டம் ஏற்றும் நிகழ்ச்சி நாளை மறுதினம் 27ஆம் திகதி நள்ளிரவு 12 மணி 3 நிமிடத்திற்கு ஆரம்பமாகிறது.

இந்த நேரத்தில் தமிழீழ மக்கள் அனைவரும் வீடுகளை திருத்தங்கள், சிட்டி விளக்குகள் அல்லது குத்து விளக்குகளைக் கடரேற்றி மாவீரர்களை நினைவுகூர வேண்டும் என விடுதலைப்புலிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (இ-6)

### கல்வியங்காட்டில் இன்று மாவீரர் விழா

தமிழீழ மாவீரர் தினவிழா இன்று ஞாயிறு காலை 8 00 மணிக்கு கல்வியங்காடு சந்தை மைதானத்தில் ஆரம்பமாகிறது. இரவு 10 00 மணி வரை பல்வேறு நிகழ்ச்சிகள் இடம்பெற உள்ளன.

நல்லூர் பிரதேச வர்த்தகர் சங்க உப தலைவர் திரு எஸ். கே. குலசிங்கம் வைபவத்துக்கு தலைமை வகிப்பார்.

கலை நிகழ்ச்சிகள் மாலை 5 15 மணிக்கு ஆரம்பமாகும்.

### இரத்ததானம்

மாவீரர் வாரத்தை முன்னிட்டு புனித பத்திரிசியார் (சென்ற் பற்றிக்ஸ்) கல்லூரி, கனிஷ்ட செஞ்சிலுவைச் சங்கத்தினர் நேற்று யாழ். போதனா ஆஸ்பத்திரியில் இரத்த தானம் வழங்கினர். கல்லூரி அதிபர், ஆசிரியர்கள் உட்பட பழைய, புதிய மாணவர்களும் இரத்த தான வைபவத்தில் கலந்துகொண்டனர். (இ 6)

### கந்தர்மடம் சனசமூக நிலையம்

கந்தர்மடம் சனசமூக நிலையம் நடத்தும் மாவீரர் விழா இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 3, 00 மணிக்கு யாழ் இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

விடுதலைப் புலிகள் பிரமுகர்களின் உரைகளை அடுத்து [illegible] தயாரைய" என்னும் நாடகங்களும் இடம்பெறும். (இ)

### விசேஷ ஆராதனை

யாழ்ப்பாணம், நவ. 25

"கிறிஸ்தவின் அந்தரங்கம்" என்னும் பொருளில் ஒரு விசேஷ ஆராதனை இன்று மாலை 5-30 மணிக்கு வட்டுக்கோட்டை பேராலயத்தில் நடைபெறுகிறது.

பேராருட் திரு டி. ஜே. அம்பலவாணர், அருள் திரு கலாநிதி எஸ். ஜெபநேசன் உட்பட திருச்சபை போதகர்கள் ஆகியோர் கலந்துகொள்கின்றனர். (இ)

## உன்னில் உயிர்ப்பேன்

இது
மரணத்தை நோக்கிய
பயணம்.
என்றும்
புரணத்தில் ஜனனிக்கும்
தமிழீழம்
பொழுதுகளில்
போர்க்கியது போதும்,
எம் தோளோடு
சேரட்டும்
உன் தோளும்,
என் குருதியின்
கல்லறையில்
நான் மாண்டால் நான்
உயிர்த்தெழப்
போவதில்லை.
என் காலடியின்
சுவடும் அந்த
ஆயுதத்தை
நீ வந்து
கை ஏந்தும்
அந்த நிமிடமே
நான் உன்னில்
உயிர்க்கின்றேன்.

— கமல்நாதன்.

## எத்தனை எத்தனை வீரரடா!

எத்தனை எத்தனை வீரரடா,
எம் மண்ணினை மீட்பதில் மடிந்து விட்டார்!
அத்தனை அத்தனை வீரர்களுக்கும்,
எம் அன்பின் முத்தங்கள் ஆரமதாம்!

எத்தனை எத்தனை எம்மவர்கள்
தம் தீவினையால் எம் துரோகிகளாம்!
அத்தனை அத்தனை துரோகிகட்கும்,
அந்த ஆண்டவன் தண்டனை திண்ணமதாம்!

வேங்கைகள் மாண்டதை எண்ணிவிட்டால்,
எம் வேதனைக் கண்ணீர் விழுதடா!
சாதனை எத்தனை செய்து விட்டார்,
அவர் சாவில் சுதந்திரம் கிட்டுமடா!

மில்லரை மேதினி மறக்குமோடா,
அவன் வீரத்தின் சாதனை வியப்புமன்றோ!
புல்லரை வென்ற புனித வேங்கை அவன்
வல்ல நல்வழி நாம் தொடர்வோம்!

திலீபனாம் தியாகி எம் காந்தி அண்ணல்,
அவன் தியாகத்தை மற்றோரும் பேச்சிவிட்டார்
ஒவ்வொரு தமிழ்மகன் குடிசையிலும்.
அவன் நினைவால் தீபம் சுடர் விடட்டும்

மாந்தரின் கையினில் சிக்கிவிட்ட
மாபெரும் வேங்கைகள் பன்னிருவர்.
விட விலைகள் விழுங்கியே மாண்டதனால்,
நாம் விம்மி விம்மி கலங்கி நின்றோம்.

கடலினில் எதிரியின் ஆதிக்கத்தை,
கைக்கிலேயே விட்டகா கடற்புலிகள்.
மூவர் தாம் சேர்ந்துமே தகர்த்துவிட்டார்.
மூண்புடன் அவர்தம் விசைப்படகை.

தம் உயிர் ஈந்தே இத் தீரத்தினை,
சாதித்து விட்டனர் தமிழ் மக்கள்.
ஈழத்தில் தமிழினம் இருக்கும்மட்டும்,
இவ் வீரரை மனதினில் இருத்திடுவர்.

— ராம் —

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

25/11/1990

# இணைப்புக்கு இணங்கி உடன்பாடு கைச்சாத்து

கொழும்பு, நவ. 25
இலங்கையில் தமிழ், முஸ்லிம் மக்கள் ஒன்றுபட்டு வாழ்வதற்கு வேண்டியது என்று கூறப்படும் உடன்படிக்கை ஒன்றை எட்டு தமிழ், முஸ்லிம் அரசியல் கட்சிகள் செய்து கொண்டுள்ளன.

இந்த உடன்பாட்டின்படி, வடக்கு - கிழக்கு மாகாணம் ஒரே மாகாண சபையாக இயங்கும்.

தமிழருக்கும் முஸ்லிம்களுக்கும் தனித்தனி மாகாண மன்றங்கள் இயங்கும். ஆனால் இவை மாகாண அரசின் கட்டுப்பாட்டில் இயங்கும் என்றும் உடன்படிக்கை கூறுகிறது.

சடந்த வெள்ளிக்கிழமை இந்த உடன்பாடு காணப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. [உ-எ]

## ஷெல் தாக்குதல்

யாழ்ப்பாணம், நவ 25
பலாலியிலிருந்து நேற்றுக் காலை கட்டுவன், குரும்பசிட்டி, ஏழாலை வடக்கு ஆகிய பகுதிகளை நோக்கி இராணுவத்தினர் ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டனர். [ஒ-5]

---

பனை அபிவிருத்திச்சபை
அறிமுகப்படுத்துகிறது

## 'கற்பகா பாண்'

[பனங்கழியிலிருந்து தயாரிக்கப்பட்டது]

தற்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கும் மாவீரர் தினக் கண்காட்சிகளிலும் மற்றும் ''கற்பகம்'' விற்பனை நிலையங்களிலும் விற்பனையாகிக் கொண்டிருக்கிறது.

(சி-5457)

---

## கண்ணீர் அஞ்சலி

### அமரர் உயர்திரு சண்முகம் ஞானப்பிரகாசம்

(ஓய்வு பெற்ற சிரேஷ்ட கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் (வடக்கு - கிழக்கு) யாழ். மாவட்ட சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கங்களின் சமாச ஸ்தாபகரும் முன்னாள் தலைவரும்)

கூட்டுறவுத் துறையின் முன்னோடியாக கூட்டுறவு சேவையை சிந்தையில் நிறுத்தி அல்லும் பகலும் அயராது உழைத்து சிக்கன சேமிப்பில் மக்களை ஒன்றிணைத்து பல சிக்கன கடனுதவு சங்கங்களை கிராமங்கள் தோறும் உருவாக்கி ஏழை மக்களின் துயர் துடைத்த செம்மல் அமரர் திரு. ச. ஞானப்பிரகாசம் அவர்களின் திடீர் மறைவினால் கூட்டுறவுத்துறை ஓர் இணையில்லாத் தந்தையை இழந்துவிட்டது: அன்னாரின் ஆத்மா சாந்திபெற பிரார்த்திப்பதோடு எமது கண்ணீர் அஞ்சலிகளை அமரரின் சேவைக்கே காணிக்கையாக்குகின்றோம்.

யாழ். மாவட்ட சிக்கன கடனுதவு
சங்கங்களின் சமாசம்.

(14847)

---

## மரண அறிவித்தல்கள்

### சின்னத்தம்பி தியாகராசா

(இளைப்பாறிய ஆசிரியர்)

கொட்டடியைச் சேர்ந்த சின்னத்தம்பி தியாகராசா காலமானார்: இவர் சின்னம்மாவின் அன்புக் கணவரும், செல்வமலரின் அன்புத் தந்தையும், இராசேஸ்வரன் [T.A நீர்ப்பாசன இலாகா, கிளிநொச்சி] இன் மாமனாரும், செல்வக்குமார், இராஜ்குமார், பத்மபிரியா ஆகியோரின் பேரனாரும், பாக்கியம், பூரணம், பொன்கிளி, சோமசுந்தரம் [திருமலை] ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று [25 11-90] 2 மணியளவில் நடைபெறும். உற்றார், உறவினர்கள், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
நா. சிவபாதசுந்தரம்
[மருமகன்]

28, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

[14663]

### ஐயாத்துரை பிலிப் ஜெயரட்னம்

[Diesel Roller Operator P.W.D]

அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும், நெடுந்தீவை வசிப்பிடமாகவும் கொண்ட ஐ.பி ஜெயரட்னம் 24.11-90 நேற்று காலமாகிவிட்டார்: இவர் மரியராணியின் அன்புக் கணவரும், டிலிப்குமார், மேரி கென்றிக்கா, பற்றிக்குமார், பிலிப்குமார் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற ஐயாத்துரை தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரரும், பினிபிறட், இராசாத்தி, மேரி திரேசா, மேரி நல்லம்மா, அருட் சகோதரி புனிதம் [கரவெட்டி], தியாகேஸ்வரி, சேவியர் சந்திரசேகரா ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்ற K.E. பேக்மன் [R.D.O], அந்தோனிமுத்து ஆகியோரின் மைத்துனரும், தேவபாஸ்கரன் கோடீஸ்வரியின் அன்பு மாமனாரும், ஜெனிபரின் பேரனும், காலஞ்சென்ற கந்தையா, சேதுப்பிள்ளை ஆகியோரின் அன்பு மருமகனுமாவார்.

நல்லடக்கம் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
பிலிப்குமார்
[மகன்]

8/2 குருசேவ் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

[14664]

---

## நோயாளர் பயணம் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், நவ. 25
சிகிச்சை பெறுவதற்காக, கொழும்புக்கு அனுப்பப்பட உள்ள நோயாளர்களின் பயணம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

அவர்களை ஏற்றிச் செல்ல இருந்த கப்பல் முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது போல இன்று (ஞாயிறு) புறப்படமாட்டாது என்றும் எதிர்வரும் புதன்கிழமை 28 ஆம் திகதி காலை பயணத்தைத் தொடங்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. [அ-15]

## பல்கலைக்கழக அரங்கில் கலை நிகழ்ச்சி

யாழ்ப்பாணம், நவ. 25
மாவீரர் தின நிகழ்ச்சிகள் வரிசையில், யாழ் பல்கலைக்கழக மறுமலர்ச்சிக் கழகம், இன்று கவியரங்கம், விவாத அரங்கம் என்பனவற்றை நடத்த உள்ளது.

காலை 9.30 மணிக்குக் கைலாசபதி அரங்கில் ஆரம்பமாகும் இவ்விசேட நிகழ்ச்சியில் விடுதலைப்புலிகள் மாணவர் அமைப்பினால் தயாரிக்கப்பட்ட நாடகமும் இடம்பெறும். 27ஆம் திகதி வரை பல்கலைக்கழகத்தில் கலை நிகழ்ச்சிகள் நடைபெறும்.

## முல்லையில் மாவீரர் வாரம்

மாங்குளம், நவ. 25
முல்லைத்தீவு மாவட்டத்தில் மாவீரர் வார நிகழ்ச்சிகள் உணர்வு பூர்வமாகக் கொண்டாடப்பட்டு வருகின்றன.

மக்கள் இந்நிகழ்ச்சிகளில் ஆர்வத்துடன் பங்குபற்றிவருகின்றனர். [உ-94]

## லைசென்ஸ்

கொழும்பு, நவ.25
வானொலி லைசென்ஸ் கட்டணம் அடுத்த ஆண்டு முதல் ஐம்பது ரூபாவாக அதிகரிக்கப்படுகிறது.

இரண்டாவது வானொலிப் பெட்டி வைத்திருப்பவர்கள் மேலதிகமாக 30ரூபா செலுத்தி வருடாந்த லைசென்ஸைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. [ஒ-எ]

---

### 9 ஊர்காவலர்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

59, ரவைக்கூடு - 3, ஷொட்கன் - 3, அதற்குரிய சன்னங்கள் - 28 ஆகியவையும் எக்ஸ்புளோடர் ஒன்றும் தங்களால் கைப்பற்றப்பட்டதாக விடுதலைப்புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த மோதல் சம்பவத்தில் மேஜர் பிரின்ஸ் என்ற போராளி வீர மரணமடைந்தார். (உ)

---

### மாங்குளம்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

வரப்பட்டது

இந்த முகாமில் தங்கியிருந்த நூற்றுக் கணக்கான படையினருள் ஏராளமானோர் கொல்லப்பட்டனர். எஞ்சியவர்கள் அருகிலிருந்த காட்டுக்குள் தப்பி ஓடிவிட்டனர்.

இந்த முகாம் மீது தாக்குதல் தொடுத்த [வியாழன்] இரவே முகாமைச் சூழ இருந்த பலம் பொருந்திய இராணுவத்தினரின் காவல் அரண்கள் அனைத்தும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் வந்து விட்டன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது [உ-94]

---

### காட்டில்...

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

போது நடந்துகொண்டிருப்பதால், இந்தத் தாக்குதல் பற்றிய முழுமையான விவரங்கள் இரண்டொரு தினங்களில் [illegible] விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் [illegible] தெரிவித்தன. [உ-94]

---

# இலங்கை தடுமாறுகிறது

சண்டிகார், நவ. 25
இலங்கை - இந்திய அணிகளுக்கு இடையில் சண்டிகாரில் நடைபெற்று வரும் கிரிக்கெட் டெஸ்ட் ஆட்டத்தின் இரண்டாம் நாளான நேற்று இலங்கை அணி அடுத்தடுத்து விக்கெட்டுகளை இழந்து ஆட்டத்தில் மிகவும் பின்தங்கிய நிலைக்குத் தள்ளப்பட்டது.

இந்திய அணி தனது முதல் இன்னிங்ஸில் 288 ஓட்டங்களை எடுத்தது.

இலங்கை அணி 8 விக்கெட் இழப்புக்கு 75 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

இரண்டாவது இன்னிங்ஸில் தொடர்ந்து துடுப்பாட வேண்டிய கட்டாயத்தைத் தவிர்க்க இலங்கை இன்னும் 14 ஓட்டங்களைப் பெறவேண்டிய நிலையில் இருப்பது குறிப்பிடத்தக்கது.

இந்திய சுருள்பந்து வீச்சாளர் வெங்கடபதி ராஜு 5 விக்கெட்டுகளை வீழ்த்தினார். [உ]

## திலீபன் நூல் நிலையம்

யாழ்ப்பாணம், நவ. 25
யாழ்ப்பாணம் மணிக்கூண்டு வீதியில் பி. எம். சி. முன்பாக நடந்த 22ஆம் திகதி திலீபன் நூலகம் திறந்து வைக்கப்பட்டது.

லெப். கேர்ணல் ராதாவின் தந்தை திரு. கனகசபாபதி, மில்க்வைற் அதிபர் திரு. கனகராசா ஆகியோர் இந்த நூல் நிலையத்தைத் திறந்து வைத்தனர். மில்க்வைற் அதிபரினால் நூல்களும் அன்பளிப்புச் செய்யப்பட்டன. (இ)

---

## இதய அஞ்சலி

### அமரர் உயர்திரு சண்முகம் ஞானப்பிரகாசம்

(வடமாகாண உலர்வலய அபிவிருத்திமன்ற ஸ்தாபகரும், இணைப்பதிகாரியும், ஓய்வுபெற்ற சிரேஷ்ட கூட்டுறவு அபிவிருத்திஆணையாளரும் [வடக்குகிழக்கு] சி. க. கூ. ச. சமாச ஸ்தாபகரும், முன்னாள் தலைவரும், சமூகநல ஒன்றியம்[Sano] ஸ்தாபகரும்.)

அமரர் உயர் திரு. சண்முகம் ஞானப்பிரகாசம் அவர்களின் அயராத சேவையாலும் சலிக்காத உழைப்பாலும் பல சேமிப்புக் கழகங்களையும் உருவாக்கி வழிநடத்தி அங்கத்தவர் பலருக்கு கடன் வாய்ப்புக்களையும் ஏற்படுத்தி தொழிற் கல்வி கலை கலாச்சாரம் என்பன வளர்ச்சியடைய பல செயற்பாடுகளை முன்னெடுத்து நடைமுறைப் படுத்திக் கொண்டிருந்த சமயம் எதிர்பாராத திடீர் மறைவு எய்திய அன்னாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை குடும்பத்தினருக்கும், உற்றார் உறவினருக்கும் தெரிவிக்கின்றோம்.

உலர் வலய அபிவிருத்தி மன்றம்.

(14848)

---

## மரண அறிவித்தல்கள்

### சண்முகம் ஞானப்பிரகாசம்

யாழ்ப்பாணம் கொட்டடியை பிறப்பிடமாகக் கொண்டவரும் இளைப்பாறிய சிரேஷ்ட கூட்டுறவு உதவி ஆணையாளரும், முன்னாள் யாழ். மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவருமாகிய சண்முகம் ஞானப்பிரகாசம் அவர்கள் காலமாகி விட்டார்.

அன்னார் சண்முகம் நாகரட்ணம் அவர்களின் அன்புப் புதல்வனும், ஜெயலட்சுமியின் அன்புக் கணவரும், ஞானசூரியர், விஜயஞானம், மனோகரி, அருச்சுனன் ஆகியோரின் அன்புத் தந்தையும், பவானி, வரதராசா, ஜெயசிங்கம் ஆகியோரின் அன்பு மாமனாரும், யோகாம்பிகை, அன்னலட்சுமி, பாலசுப்பிரமணியம் ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 25-11-90 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் யாழ்ப்பாணம் பிரவுண் வீதி இரண்டாம் ஒழுங்கை 10/1 ஆம் இலக்க அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் இவ் அறிவித்தலை உற்றார், உறவினர் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ச. பாலசுப்பிரமணியம்.
[சகோதரர்]

10/1, 2ம் ஒழுங்கை,
பிறவுண் றோட்.

[14845]

---

திருமதி

### லீலாவதி பரராஜசேகரம்

திருமதி லீலாவதி பரராஜசேகரம் 24-11-90 இல் காலமானார்.

அன்னார் காலம் சென்ற கந்தையா பரராஜசேகரம் (முன்னாள் பொது எழுதுவினைஞர் சேவையில் சேவையாற்றியவர்) அவர்களின் அன்பு மனைவியும் திருமதி கலாவல்லி இலங்கரட்ணம், சேகர் (பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை), அமிர்தவல்லி (ஆசிரியை அவிசாவெல) ஆகியோரின் அருமைத் தாயாரும், இலங்கரட்ணம் (முகாமையாளர் இலங்கை வங்கி மாளிகாவத்தை), திருமதி அருட்செல்விசேகர் (வர்த்தகத் திணைக்களம் யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமியும், காயித்திரி, அபிராமி, ஜனனி ஆகியோரின் அன்புப் பேத்தியுமாவார்.

ஈமக்கிரியைகளைப் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் எல்லோரும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் வேண்டப்படுகின்றனர்.

தகவல்:
வி. நாகரத்தினம்.

கொக்குவில் வீதி,
திருநெல்வேலி வடக்கு.

(14846)

---

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி 292 [illegible] தில் உள்ள அச்சகத்தில் 25 - 11 - 1990 இல் அ[illegible] வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org